புதுக்கோட்டை மாவட்ட செய்திகள்



ராசாளிப்பட்டியில் மூலிகை செடிகளின் கண்காட்சியை மத்திய மந்திரி ரகுபதி பார்வையிட்ட போது எடுத்த படம். அருகில் ஒன்றியக்குழு தலைவர் மு.பி.மணி, துணைத்தலைவர் மா.தங்கசிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### விராலிமலை அருகே

# ஊருக்கு 100 மரம் வளர்ப்போம் திட்டம்

## மத்திய மந்திரி ரகுபதி தொடங்கி வைத்தார்

விராலிமலை, ஜன.14-

விராலிமலை அருகில் உள்ள ராசாளிபட்டியில் ஊருக்கு 100 மரம் வளர்ப்போம் திட்டத்தை மத்திய மந்திரி ரகுபதி தொடங்கி வைத்தார்.

### தொடக்க விழா

விராலிமலை அருகில் உள்ள ராசாளிபட்டியில் மேக்ட் தொண்டு நிறுவனத்தின் குழந்தைகள் இயக்கம் சார்பில் ஊருக்கு 100 மரம் வளர்ப்போம் திட்ட தொடக்க விழா நடந்தது.

குழந்தைகள் இயக்க தலைவி கல்பனா தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார். ஊராட்சி தலைவர் நடராஜன், கவுன்சிலர் முத்துலெட்சுமி, ஆண்ட்ரூ சேசுராஜ் முன்னிலை வகித்தனர். திட்டத்தை மேக்ட் இயக்குனர்சிரில்அலெக்சாண்டர் அறிமுகப்படுத்தி பேசினார்.

### மூலிகை செடிகள் கண்காட்சி

மத்திய மந்திரி எஸ்.ரகுபதி ஊருக்கு 100 மரம் வளர்ப்போம் திட்டத்தை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தும் மூலிகை செடிகள் கண்காட்சியை திறந்து வைத்தும் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இன்றைய நிலையில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் பெரிய அளவில் ஏற்படுகிறது. மரங்களை வெட்டியதால் தான் இந்த நிலை. வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற நிலையில் இருந்து வீட்டுக்கு 10 மரங்கள் வளர்ப்போம் என அனைவரும் உறுதி எடுத்து மரங்களை வளர்க்க வேண்டும். தமிழக முதல்-அமைச்சரின் பிறந்த நாளில் முதல்-அமைச்சர் மரங்கள் வளர்க்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். $3\frac{1}{2}$ கோடி மரக்கன்றுகளை ஈஷா யோகா மையம் வழங்குகிறது. எனவே குழந்தைகளிடமும், மரம் வளர்க்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற மேக்ட் நிறுவனத்தின் முயற்சிக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

இவ்வாறு மத்திய மந்திரி ரகுபதி பேசினார்.

### கலைநிகழ்ச்சி

விழாவில்ஒன்றியக்குழுதலைவர் மு.பி.மணி, துணைத்தலைவர் மா.தங்கசிங்கம், கவுன்சிலர்கள் ராமசாமி, வளர்மதி காளமேகம், தமிழ்செல்வி மோகன், வக்கீல் வேணுகோபால், கவிஞர் சவுமா, மாநில தொண்டரணி தலைவர் சரவணன், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை அருள்ஜோதி மற்றும்தி.மு.க.நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஈஷா யோகா மையத்தினர் மரக்கன்றுகளை வழங்கினர். குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.

முடிவில் குழந்தைகள் இயக்க மாநில செயலாளர் துரைராஜ் நன்றி கூறினார்.